விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 51 | தை - 2000 | பக்கங்கள் 12 | ஒளி 39

UNIVERSITY ... 08 MAR 2000 PERIODICALS ...

# யாழ். கூட்டுறவுப்பயிற்சிக்கல்லூரியில்

# சிறந்த நூலகம் அமைய வேண்டும்!

### கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி திறப்பு விழாவில் கூட்டுறவுஅபிவிருத்தி உதவிஆணையாளர் (எண்பார்வை) திருமதி கோ. திருநாவுக்கரசு

யாழ் குடாநாடுபூராவும் யூ. என். எச். சி. ஆர் மனிதநேயஅடிப்படையில் பலவிதமான புனரமைப்பு வேலைகளைத்திட்டமிட்ட அடிப்படையில் செய்துவருகிறது. இந்தவகையில் தான் கூட்டுறவும் ஒருமனிதநேய அமைப்பாக செயற்பட்டுவருவதால் கூட்டுறவுக்கல்லூரியின் சேவையைப் பன்முகப் படுத்தும் நோக்குடன் புனரமைப்பு செய்ய நிதிஉதவி வழங்கினோம்.

யாழ்ப்பாணம்குருநகரில் புனரமைப்புச் செய்ப்பட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிதிறப்புவிழாவில் கல்லூரி விரிவுரை மண்டபத்தைத் திறந்துவைத்துப் பேசிய யூ. என். எச். சி ஆர். பிரதிநிதி திரு. லோணாங் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்மாவட்டக்கூட்டுறவு சபைத் தலைவர் திரு பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் கூட்டுறவுக்கொடியை ஏற்றி வைத்தார்.

யூ. என். எச். சீ. ஆர் பிரதி நிதி திரு. லோணாங் தொடர்ந்துபேசுகையில்கூறியதாவது.

மக்களுடைய வாழ்க்கைநெறியின் அடிப்படையில் அமைந்த கூட்டுறவு அமைப்பை இங்குபயிற்சி பெறும் மாணவர்கள், மக்கள் முன்னேற்றத்திற்கானதுறைகளில்ஈடுபடுத்திவழிகாட்டி

(12ம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

❈ கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுச்சட்டப் பிரமாணங்கள்
❈ ஆடுவளர்ப்பு
❈ நுளம்புகளால் பரவும் மலேரியாவும் ஏனைய நோய்களும்.
❈ இருபதாம் நூற்றாண்டின் இலங்கை கூட்டுறவு இயக்கத்தில்
❈ நிறுவன நோக்கினை அடைவதில் மனித வளத்தை ...
❈ உலக நாடுகளின் திருமண சம்பிரதாயங்கள்
❈ அறிவியல் இரகசியம்

# இயக்குனர்களுக்கு 1மாதத்திற்கு 600ரூபா படி

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இரண்டாம்படிக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கள் என்பவற்றின் இயக்குனர் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் இயக்குனர்களுக்கு ஒரு கூட்டத்திற்கு 200/- வீதம் மாதம் 600/- வுச்கு உட்படட படி கெர்ள்ளலாம்.

வடக்குக்கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி. க. சிவசிதம்பரம் சகல கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருப இல. 07/99ன் மூலம் அறிவித்துள்ளார்.

அச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலாபத்தில் இயங்கிவரும் மேற்குறிப்பிட்ட சங்கங்களின் இயக்குனர் சபைக் கூட்டங்களுக்கு 50/ ரூபா வீதமான படியொன்றினை மாதமொன்றுக்கு உச்சஎல்லை 150/- வுக்கு உட்படப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த இலாபத்தினைக் கணக்கிடும்போது கிராமிய வங்கிப் பிரிவினரை தவிர்த்துக்கொள்ளவேண்டும்

(11ம் பக்கம் பார்க்க)

★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டப் பிரமாணங்களின் அத்தியாயம் iiiல் கூட்டுறவுப் பணியாளர்களின் பொதுவான நடத்தை பற்றி கூறப்பட்டுள்ள விடயங்கள்:

## பொது

68. ஒவ்வொரு பணியாளரும்.

அ. தனக்கு கொடுக்கப்பட்டுள்ள கடமைகளை விசுவாசத்துடனும், விழிப்புடனும், பணிவுடனும், திறமையுடனும், ஆற்றல் வேண்டும்;

ஆ. தனது மேலதிகாரிகளினால் வழங்கப்படும் கட்டளைகள், பணிகள், அனைத்தையும் அனுசரித்துப் போகவேண்டும்.

இ. சங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படாதவிதத்தில் தன்னைப்பேணிக் கொள்ளவேண்டும்.

ஈ. சங்கத்தின் உடமைகளினதும், உரிமைகலினதும் பாதுகாப்பிற்கு அவசியமான அனைத்தையும் செய்தல் வேண்டும்;

உ. சங்கத்தின் மேற்கொள்ளப்படும் வேலைகள் திருப்திகரமாக நிறைவேற்றப் படுவதை உறுதி செய்யும் வகையில் தனதாற்றலுக்கு இயன்றவாறு பாடுபடல் வேண்டும்.

69. பணியாளர் பொதுமக்களுடன் பணிவுடன் பழகி சங்கத்திற்கோ, அதன் கிளைக்கோ அல்லது ஏதாவது சேவை நாடி வருபவர்கள் அனைவருக்கும் தாமதமின்றி உதவ வேண்டும்.

## சொத்துக்களை வெளிப் படுத்தல்

70. ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் சிலபகுதி சார்பதவியணியின் பணியாளர் ஒவ்வொருவர்க்கும் தமது தனியார் கோவையில் சேர்க்கப் படுவதற்காக ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தமதும் தம்வாழ்க்கைத் துணைவியினதும் தம்மில் தங்கியிருப்போரதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனவற்றிய விபரங்களை தமது முதல் நியமனத் தேதியின் போது உள்ளபடி சங்கத்திற்கு அறியத் தருவதுடன் அதன்பின்னர் இவ்விபரங்களை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அறியத்தருதலும் வேண்டும்.

71. ''தஙகியிருப்போர்'' என்பது பனியாளரில் உண்மையாகவே தங்கிஉள்ள பிள்ளைகள்கணவன்/மனைவி இருவரினதும், பெற்றோர், சகோதரிகள், சகோதரர்கள் என்பவரை உள்ளடக்கும்.

72. இத்தகய சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ஏதாவது விசாரணை ஒன்றின் பணியாளர் ஒருவர் தனது சொத்துக்கள், கடன்கன் என்பவற்றினது கூற்றின் செப்பம் அல்லது அதன் பால் காலத்திற்குக் காலம் ஏற்பட்டிருக்கத்தகு ஏதாவது அதிகரிப்பு அல்லது குறைவு என்பன தொடர்பானதகவல்களை அவ்வாறு செய்யும்படி வேண்டப்படுமிடத்து அளித்தல் வேண்டும். அத்தகைய பணியாளர் போதிய தகவல்களை வழங்காது அல்லது வழங்க முடியாதிருப்பின் அது அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போதுமான ஏதுவாக அமையும்.

## சொத்துக்கள் கொள்ளல் அல்லது முதலீடு செய்தல்

73 பணியளார்ஒருவர்கூட்டுறவுப்பணியாளர் என்றதன்மையில் அவரது கடமைகளுடன் தோற்றப்பாங்கிலோ. நிஜமாகவோ முரணுறச் செய்யவல்ல அல்லது அவரது கடமைகள் நிறைவேற்றத்தைப் பாதிக்கவல்ல பிரத்தியோக அலுவல்களை ஈடுபடுத்தும் எந்தவித முதலீட்டினையோ, ஈடுபாட்டினையோ, நேரடியாகவே மறைமுகமாகவோ கொள்ளலாகாது.

74. கூட்டுறவு வேலையாளர்களினால்அல்லது அவர்களதுசார்பில் அல்லது அவர்களது வாழ்க்கைத் துணையால் அல்லது அவரில் தங்கியிருப்போரினால் செய்யப்படும் சகல முதலீடுகளும் அம் முதலீடு செய்யப்பட்ட மூன்றுமாத காலத்தினுள் சங்கத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

75. ஆணைக்குழு கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்புடையவர்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்களில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளவர்களின் நடத் தயை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக அவர்கள் நேர்மையும், கண்ணியத்தையும் பேணும் நோக்கில் கடன்களுக்காக கைது செய்யப்படுதல் நொடிப்பு, வெளிப்பாடு என்பவற்றின் உள்ளடக்கிய சூழ்நிலை தொடர்பாக விதிகளை இயற்றலாம்

## சஙக நிதியத்தை தனிபபட்ட தேவைகளுக்காக உபயோகித்தல்

76 சங்கத்தின் பணத்தை தன்பொறுப்பில் வைத்திருக்கும் கடமைகளைக் கொண்ட பணியாளொருவர் அத்தகையபணத்தைத் தனிப்பட்ட தேவைகளுக்குப் பாவித்தால் அவர் குற்றமொன்றினைப் புரிந்தவராவதுடன் அவர் மீது வழக்குத் தொடரப் படுவதற்கும், சங்கத்தின் சேவைகளிலிருந்து அவர் நீக்கம் செய்யப்படுவதற்குப் அவர் ஆளாவார்.

## புதிய நிர்வாகிகள்

புலோலிமேற்கு சதாவதானி சி. க. கூ. சங்கத்தின் 12 வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ஆ. வேலும்மயிலும் உபதலைவர் அ. துரைசிங்கம், செயலாளர் திரு ச [illegible]சுவநாதன், பொருளாளர் திரு. சோ செல்வராசா ஆகியோருடன் 5 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடுவளர்ப்பு

ஆடுகள் இலகுவில் இசைவாக்க மடையக் கூடியதன்மையான விலங்காகையால் அவற்றைத் தகுந்த முறையில் பராமரித்து சிறந்த பலனைப் பெறலாம் ஆடுகள் குறைந்த செலவுடன் கூடிய வருவாய் தருவதுடன் இலகுவான பராமரிப்பில் வளர்க்கலாம் ஆடு வளர்ப்பவர்களுக்கு கோழி மாடு போன்றவற்றுக்கு ஏற்படும் வீடமைப்புச் செலவிலும்பார்க்க ஆடுகளுக்கு குறைந்த செலவில் அமைத்துக் கொள்ளலாம்.

ஆடுகளில் இருவகைகாணப்படுகிறது அதில் வெள்ளாடு வளர்ப்பில் பால், இறைச்சி, பெற்றுக்கொள்கிறோம். செம்மறிஆடுவிவசாயத் தேவைக்கான பட்டி அமைப்பிற்கே பெரும்பாலும் வளர்க்கப்படுகிறது. தற்போது யாழ்குடா நாட்டைப் பொறுத்தவரையில் செம்மறி ஆட்டு வளர்ப்பு அருகிவருகின்றதைக் காணலாம்.

எமது பகுதியில் காணப்படும் வெள்ளாட்டு இனங்கள் உள்ளூர்கலப்பினங்களே. இவ் உள்ளூர் இனங்கள் 3-4 வாரங்களில் 25 கிலோ நிறையாகவே இருக்கின்றன. இவ் உள்ளூர் இனங்களை தரம் உயர்த்தும் முயற்சியில் புத்தளம் மாவட்டத்தில் ஜேர்மன் சமஷ்டிக்குடியரசு நாட்டு உதவியுடன் இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆடு அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றது. இப்படி தரம் உயர்த்தப்பட்ட இனங்கள் ஒரு வருடத்தில் 30 கிலோ உடல்நிறையாக இருக்கிறது.

**இனங்கள்:-**

### யமுனாபாறி

உற்பத்தி : இந்தியாவிலுள்ள உத்திரப பிரதேசம அத்துடன மத்திய பிரதேசம்.

விபரம் : நீண்டகால்களையும்தொங்குகின்ற காதுகளையும், உரோமன நாசியையும், நீளமான மயிர்களை முக்கியமாக பின் தொடைப்பகுதியிலும்அத்துடன் தோல்குறுகிய அமைப்பையும் உடையது.

நிறம் : ஏதாவது நிறம். முக்கியமாக இளமஞ்சல் - மஞ்சல் பழுப்பு நிறம்
உடலமைப்பு : பெரியது அத்துடன் நீளமானது.

குறிப்புகள் : இரண்டு குட்டி ஈனும் வீதம் குறைவாகவும் குறிப்பாக உலர் வலயத்தில் விரும்பத்தக்கதாகவும் உள்ளது.

### கொட்டுக்கச்சிய

உற்பத்தி : பெற்றோர் தென் இந்தியா தற்போது இலங்கையிலுள்ள புத்தளம் மாவட்டம்.

விபரம் : நீண்டகால்கள், கட்டைக் காதுகள், ஒடுங்கிய உடல் அமைப்பும் ஒரலான நெஞ்சமைப்பும் சிறிய மயிர்களையும் உடையது.

நிறம் ; கறுப்பு

உடலமைப்பு : நடுத்தரமானது;
குறிப்புகள் : சிக்கனமான வீரியம் உள்ள கூடுதலான அளவு இரட்டைக் குட்டி ஈனும் திறன் உடையது
நோக்கம் : இறைச்சியும் பாலும்.

### போயர்

உற்பத்தி : தென்னாபிரிக்காவும் ஐரோப்பாவும்.

விபரம் : கட்டைக்கால்கள் அகன்ற தொங்குகின்ற காதுகள் ஆழமான நெஞ்சமைப்பு, மென்மையான கட்டை மயிர்கள் கொண்டன.

நிறம் : வெள்ளை உடன் சிவப்புக் கலந்த மண்ணிறம் தலையிலும கழுத்திலும் உண்டு.

உடலமைப்பு : பருத்த உடலமைப்பு
குறிப்புகள் : இறைச்சியினம் நடுத்தர இரட்டைக் குட்டியீனும் வீதம்,
நோக்கம் : இறைச்சி

### ஸ்ரீ லங்கா போயர்

உற்பத்தி : ஸ்ரீலங்காவிலுள்ள புத்தளம மாவட்டத்தில் கொட்டுக்கச்சிய அரசாங்க ஆடு இன விருத்தி நிலையம.

விபரம : நடுத்தரமான நீண்ட கால்களையும் காதுகளையும இறுக்கமான உடலமைப்பையும நன்றாக அமைந்துள்ள நெஞ்சும, மடியும் கட்டை மயிர்களையும உடையன.

நிறம : பிரதானமாக வெள்ளையுடன் கூடிய கறுப்பு அல்லது மண்ணிறம் உடைய தலையையும கழுத்தையும் உடையன.

உடலமைப்பு : வலிமைவாய்ந்த பெரிய உடலமைப்பு.

குறிப்புகள் : விரும்பத்தக்க இரண்டு குட்டி ஈனும வீதமும நல்ல வளர்ச்சி வீதத்தையும உடையது;

நோக்கம : பாலுக்காகவும் இறைச்சிக்காகவும்.

### சாணன் (சனல்)

தாயகம் : சுவிற்சலாந்து, நிறம் வெள்ளை.

உடல் நிறை கடா 40 Kg
உடல் நிறை மறி 35 Kg
பால் விளைவு 635

### வீடமைப்பு

ஆடுகளை காலநிலை மற்றும் நோய்த்தாக்கத்தில் இருந்துபாதுகாப்பதற்கு வீடமைப்பு வசதியளித்தல் அவசியமாகும். நிலமட்டத்தில் இருந்து உயரமாக அமைக்க வேண்டும். கூடுகள் எந்த நேரமும் உலர்ந்த தன்மையில் இருத்தல் வேண்டும்.

முதிர் ஆட்டிற்கு 18 சதுர அடியும் கர்ப்ப ஆட்டிற்கு 20 சதுர அடியும் கொடுக்க வேண்டும். இரு ஆடுகள் வளர்ப்பதற்கு 5அடி நீளம் 2½ அடி அகலம் 6 அடி உயரம் போதுமானதாகும்.


**K. K. குகநேசன்**
பண்ணைமுகாமையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
விவசாய நிறுவனம.
மருதனார்மடம், சுன்னாகம்.


### வளர்ப்பு ஆடுகளின் தெரிவு

சினைப்படுத்தும் கடாக்களைத் தெரிவு செய்யும போது நல்ல ஆண்மைத தோற்றம் உடையதாகவும், துடிப்பாகவும, வீரியமாகவும் உடல், நடுத்தர பருமனுடையதாகவும இருக்க வேண்டும. இளம கடாவை 10 - 12 மாத வயதில் இனவிருத்திக்குப்பயன்படுத்தலாம. இறைச்சிக்காக வளர்ப்பதாயின கடாக்களை 3 மாத வயதில் விதைகளை அகற்றி இறைச்சிக்காக பயனபடுத்தலாம மறியாடு தெரியும்போது எப்பக்கம் நின்று பார்த்தாலும ஆப்பு வடிவானதாகவும, நல்ல தேகாரோக்கியமாகவும பெரிய பால்மடி தடித்த பால் நாளங்கள உள்ளதாகவும வயது 4 வருடத்துக்குக் குறைவானதாகவும் தெரிவு செய்ய வேண்டும.

### சினைப்படுத்தல்

ஆடானது மிகக் குறுகிய காலத்தில் வேட்கை அறிகுறி காட்டும். இந்நேரத்தில் சினைப் படுத்தக் கூடாது இவற்றைப் பிரித்து வளர்த்துக் குட்டி தாங்கும் பருவம் அடைந்த பின் 1 - 1½ வருட வயதின்பின் சினைப்படுத்தலாம். இதன் வேட்கைக் காலம் 17-21 நாட்களாகும். வேட்கைக் குறிகள் 24 - 48 மணித்தியாலங்கள நீடிக்கும் வேட்கை அறிகுறிகளாவன அமைதியின்மை, வாலை ஆட்டுதல், சிறுநீர் கழித்தல், ஒன்றின் மேல் ஒன்று தாவுதல், அடிக்கடி கத்துதல் போன்றன

(10ம் பக்கம் பார்க்க)

# நுளம்புகளால் பரவும் மலேரியாவும் ஏனைய நோய்களும்

1 குழந்தைகளை, நுளம்புக் கடியிலிருந்து கட்டாயம் பாதுகாக்க வேண்டும்.

* நுளம்புக் கடிமூலமே, மலேரியா, ஜப்பான் என் கெபலைட்டிஸ் (மூளைக் காய்ச்சல்), டெங்கிக்காய்ச்சல், யானைக்கால் நோய் என்பன பரவுகின்றன. பெரும்பாலான நுளம்புகள் பொழுதுபட்ட வேளையிலும் இரவு நேரத்திலும் கடிக்கின்றன. எனினும் டெங்கிக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பகல் வேளைகளிலேயே மனிதரைக் கடிக்கின்றன. வீட்டுக்குள் மட்டுமன்றி வெளிப்புறங்களிலும் நுளம்புகள் கடிக்கலாம். இதனால் சிறு குழந்தைகளை நுளம்பின் தொல்லையிலிருந்து காப்பாற்றிக் கொள்ளல் அவசியம். இதற்கான சில வழிவகைகளாவன

- நுளம்புவலைகளைப் பாவித்தல் (நுளம்பை விரட்டக்கூடிய இரசாயன மருந்து பூசப்பட்டவலைகள் மிக உசிதமானவை; இவை இப்போது கிடைக்கின்றன.)

- சிற்றனெல்லா புல்லெண்ணெயை உடலில் பூசிக்கொள்ளல்.

- நுளம்புச் சுருள்களை உபயோகித்தல்.

- உடல் முழுவதையும் மறைக்கக் கூடிய வகையில் போர்த்தல், அல்லது உடைகளை அணிந்து கொள்ளுதல்.

- வேப்பிலை, மூந்திரிக்கொட்டைத்தோல், உரிமட்டை போன்றனவற்றை எரித்து புகையைஉருவாக்கல்.

- நுளம்பு உள்ளே நுழையாதவாறு யன்னல், கதவுகளுக்கு வலைகளைப் பொருத்துதல்.

- நீர்த்தேக்கங்களில் நுளம்புப் புழுக்களைஉண்ணும்மீன்வகைகளைவளர்த்தல் வீட்டின் உள்ளே உள்ள நுளம்புகளைக் கிருமிநாசினிகளை உபயோகித்து அழித்தல்.

* நுளம்புக் கடியிலிருந்து ஊரிலுள்ள எல்லா மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். நோய்கண்ட ஒருவரிடமிருந்து ஏனையோருக்கு மலேரியா ஜப்பான் என் கபலைட்டிஸ் (மூளைக்காய்ச்சல்) டெங்கி, யானைக்கால் நோய் ஆகியவற்றைப் பரப்பும் சக்தி நுளம்புகளுக்கு உண்டு:

2. நுளம்பு பெருகாது தடுப்பதிலும், நுளம்புப் புழுக்களை அழிப்பதிலும், ஊரிலுள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

* நீர் தேங்கி நிற்கக்கூடியஎந்த இடத்திலும் நுளம்புக்கள் பெருகும், எனவே அத்தகைய இடங்களை இல்லாது ஒழிப்பது ஊரிலுள்ள மக்களது தலையாய கடமை. நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களைத் துப்பரவு செய்தல், பள்ளம் குழிகளாயின் அவற்றைநிரப்புதல், தண்ணீர் ஓடிவிடக் கூடியவகையில் வடிகால்களை அமைத்தல், தங்கிநிற்கும் தண்ணீரில் எண்ணெயை அடித்துவிடல் போன்ற வழிவகைகளின் மூலம் நுளம்புப் புழுக்களை ஒழித்து விடலாம்.

* மலேரியாவைப்பரப்பும் 'அனோபிலிஸ் கியு லெசிபேசிஸ்' என்ற வகை நுளம்பு, சூரியஒளிபடும் போது மெதுவாகஓடும் அல்லதுதேங்கி நிற்கும் தண்ணீரில் பல்கிப்பெருகுகிறது. வரட்சிக் காலத்தில் வற்றிப்போகும் ஆறுகள், வாய்க்கால்கள், மூடப்படாது இரத்தினக்கல் அகழ்வுக் குழிகள், கற்குழிகள், ஆழம்குறைந்த கிணறுகள் போன்றனவற்றிலும், நீர் தேங்கி நிற்கக்கூடிய ஏனைய இடங்களிலும் இந்நுளம்புகள் பெருகுகின்றன. எனவே, இத்தகைய இடங்களைத் துப்பரவு செய்து நுளம்புப் புழுக்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

## சுகவளம்

* ஜப்பான் என் கெபலைட்டிஸ் (மூளைக்காய்ச்சல் நோயைப் பரப்பும் 'கியுலெக்ஸ் ட்ரய்ட்டீநியோ றிங்கஸ்' 'கியுஸ்லெக்ஸ் ஜெலிட்ஸ்' போன்ற நுளம்புகள் வயல்களிலும் நீர் தேங்கி நிற்கும் ஏனைய இடங்களிலும் பெருகுகின்றன. வயலில் தேங்கும் தண்ணீரை வாரத்திற்கு ஒருமுறையாவது வெளியேற்றல். நீர் தேங்கும் ஏனைய இடங்களை இல்லாது ஒழித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் இவற்றில் உருவாகும் நுளம்புப் புழுக்கைகளை ஒழிக்கலாம்.

* டெங்கிக்காய்ச்சலைப் பரப்பும் 'ஈடிஸ்ஈ ஜிப்டஸ் ஈடிஸ் எல்பொபிக்டஸ்' ஆகியநுளம்புகள் நீர் சேரக்கூடிய வெற்றுபாத்திரங்கள்பொருள்கள்என்பனவற்றில்பெருகுகின்றன நீர் சேரக் கூடிய வெற்று டின்கள், தயிர்சட்டிகள், மூட்டிகள், பழைய டயர் சிரட்டை, கோம்பை போன்றவற்றை வீட்டு அயல்புறங்களில் வீசுவதைத் தவிர்ப்பதன் மூலம் இந் நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கலாம் இத்தகைய பொருட்களை உடைத்து நொறுக்கலாம். அல்லது புதைக்கலாம் எரிக்கக்கூடியவற்றை எரித்துவிடலாம். மலர்ச்சாடிகள் எறும்புகளை அகற்றுவதற்கு வைக்கப்படும் தண்ணீர்ச் சாடிகள் என்பனவற்றிலுள்ள தண்ணீரில் சிறிது உப்பை அல்லது சவக்காரத்தைக் கலந்துவிடவும். முடியுமாயின் அவற்றிலுள்ள தண்ணீரை அடிக்கடி மாற்றவும். கூரையின் மேல் அல்லது சூற்றங்களில் கிடக்கும் நீர்சேரக்கூடிய டயர்களில் மண்ணை நிரப்பிவிடவும். அல்லது நீர் ஓடிவிடக் கூடியவாறு அவற்றில் ஓட்டைகளை ஏற்படுத்தி விடவும். கூரைப்பீலிகளில் நீர் தேங்கி நிற்காதவாறு அவற்றில் சேரக்கூடிய கூளம் குப்பைகளை அடிக்கடி சுத்தம் செய்து விடவும் குடம் பாத்திரங்கள், ஜொக்குகள் என்பனவற்றில் நீர் எடுப்பதற்கு முன்னர் அவற்றை நன்கு கழுவிக் கொள்ளவும்.

* யானைக்கால் நோயைப் பரப்பும் 'கியுலெக்ஸ் க்வின்கி பெசியேட்டஸ்' நுளம்பு மலசலகூடக் குழிகள், சாக்கடை ஆகியவற்றிலுள்ள அசுத்த நீரில் பெருகுகின்றது மலசல கூடத் தரைகளில் உடைந்து நீர் தங்கக் கூடிய இடங்களைச் சீர் செய்து மூடிவிடுங்கள். சாக்கடைக் குழாயில் நீர் வடிந்தோடச் செய்யுங்கள் அவற்றைச் சுத்தம் செய்து விடுங்கள்.

* வீட்டையும், சுற்றாடலையும் தொடர்ந்து துப்பரவாக வைத்திருப்பது நுளம்பு பெருகுவதைத் தடுக்கச் சிறந்த வழி.

* மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஒழுங்காக வீட்டினுள் எல்லாப் பகுதிகளுக்கும் அதேபோன்றுவெளிப்புறத்திலுள்ள விறகுக் கொட்டில் கால்,

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டில் இலங்கைகூட்டுறவியக்கத்தின்சாதனைகளும்

# இருபத்தியோராம் நூற்றாண்டில் அதன் விரிவாக்கமும் செயற்பாடுகளும்

இருபதாம்நூற்றாண்டின்ஆரம்பத்தில் தோன்றிய இலங்கைக் கூட்டுறவியக்கம் தனது ஒரு நூற்றாண்டுக்கால வரலாற்றை நிறைவு செய்யும் நிலையில் இருக்கின்றது. கடந்த ஒரு நூற்றாண்டுக் காலப்பகுதியில் இலங்கைக் கூட்டுறவியக்கம் புரிந்த மாபெரும் சாதனைகளை மதிப்பிடுவதும் எதிர்வரும் இருபத்தியோராம் நூற்றாண்டில் அதன் விரிவாக்கமும் செயற்பாடுகளும் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை எதிர்வு கூறுவதும் இவற்றை இலகுவில் அடைவதற்கு கூட்டுறவு அமைப்புக்கள் கையாள வேண்டிய முகாமைத்துவ நுட்பங்கள் யாவை? என்பதைப் பரிசீலனை செய்வதும் இக்கட்டுரையின் முக்கிய குறிக்கோள்களாகும்.

கடந்த நூற்றாண்டில் நன்கு வளர்ச்சியடைந்த மேற்குத்தேச கூட்டுறவு அமைப்புக்கள் எதிர்நோக்கியிராத பாரிய பொருளாதார சமூக கலாச்சார அபிவிருத்திப் பொறுப்புக்களை ஏற்று அவற்றை பூரணமாக நிறைவு செய்யவேண்டிய பாரிய பொறுப்புக்களையுடையவையாக இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்கள் இருந்தன நாட்டை எதிர்நோக்கியுள்ள சகல பிரச்சினைகளையும் தீர்த்து நாட்டை அபிவிருத்தி செய்யும்பணி குறைவிருத்தி நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்களிடம் அரசாங்கங்களால் சுமத்தப்பட்டிருந்தது இத்தகைய பாரிய பொறுப்புக்களை மேற்குத்தேச நாடுகளின் நன்கு வளர்ச்சியடைந்த கூட்டுறவு அமைப்புக்கள் என்றுமே எதிர்நோக்கியதுமில்லை. ஏற்றுக்கொண்டதுமில்லை.

மேற்குத்தேச கூட்டுறவு அமைப்புக்கள் எக்காலத்திலும் எதிர்நோக்காத பாரிய பொருளாதாரப் பிரச்சனைகளை குறைவிருத்தி நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்கள் கடந்த நூற்றாண்டில் எதிர்நோக்கின குறிப்பாக இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்கள்எதிர்நோக்கியபிரச்சினைகளும் சவால்களும்மட்டற்றவையாகும். இக்காலப்பகுதியில்எமது கூட்டுறவியக்கம் முதலாளித்துவ எதிர்ப்பு, அரசியல் தலையீடுகள், போட்டிப் பொருளாதார நிலையை எதிர்கொள்ளல், போதிய சொத்து நிதி வசதியின்மை, துறைசார் தொழில்நுட்பமின்மை,பயிற்சியும் அனுபவமும் மிக்க ஆளணியும் தலைமைத்துவமுமின்மை, அங்கத்தவரின் விசுவாசமிக்க பங்களிப்பின்மை இரண்டாம்படிக் கூட்டுறவு அமைப்புக்கள் கோட்பாட்டு நிறுவனங்கள் நன்கு வளர்ச்சியடையாமை போன்ற பாரிய இடர்களை குறைவிருத்தி நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்கள் எதிர்நோக்கியிருந்தன.

வேறுசில கூட்டுறவு அமைப்புக்கள் வேறுபல பிரச்சனைகளையும் எதிர்நோக்கியிருந்தன. விசேடமாக இலங்கையின் வடக்குக்கிழக்குமகாண கூட்டுறவு அமைப்புக்கள் உள்நாட்டுப் போர் பாரிய மனித இடப்பெயர்வுகள், பாரிய சொத்திழப்புக்கள், உயிரிழப்புக்கள், இவற்றால் ஏற்பட்ட முகாமைத்துவ சீர்கேடுகள் போன்ற பாரிய பிரச்சினைகளைஎதிர்த்து எதிர்நீச்சல் போடவேண்டிய நிலையில் இருந்தன.

இ. சுப்பிரமணியம்
அதிபர் யாழ் பிராந்திய
கூட்டுறவுக் கல்லூரி

இத்தகைய இடர்களுக்கு மத்தியில் தான் எமது கூட்டுறவியக்கம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது. இத்தகைய இடர்களுக்கு மத்தியிலும் எமது கூட்டுறவியக்கம்நாட்டின் அபிவிருத்தியிலும் அங்கத்தவர்களின் மேம்பாட்டிலும் பெருமளவிலான பங்களிப்பை நல்கியுள்ளதென்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது இக்கூற்றினை பல ஆசிரியர்கள் விமர்சிக்க முற்பட்டுள்ளனர் நாமும் இதனை விமர்சனக் கண்ணோட்டத்தில் அணுகுவது மிக அவசியமாகும்

கடந்த நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார சமூககலாச்சாரமறுமலர்ச்சிக்கும் இலங்கைக் கூட்டுறவியக்கத்திற்கு மிடையேமிக நெருங்கிய தொடர்புகள்உண்டென்பதை எவரும் விமர்சிக்கவோ, மறுக்கவோ முடியாது. இலங்கையின் இத்துறைகளில் ஒரு இரத்தம் சிந்தாத அமைதியான படிப்படியான வளர்ச்சிப் புரட்சி ஏற்படுவதற்கும் நாடு அபிவிருத்தியடைவதற்கும் இலங்கைக் கூட்டுறவு அமைப்பு பெரும் பங்களிப்பை நல்கியுள்ளது

இலங்கையின் ஜனநாயக அரசியல் துறையின் வளர்ச்சிக்கு கூட்டுறவியக்கம் மூலவித்தாக அமைந்துள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக இலங்கைக் கூட்டுறவு அமைப்புக்கள் சிறந்த குடியரசுப்பாங்கான பொருளாதார சமூக அமைப்பாக பாமரமக்கள் மத்தியில் செயற்பட்டமையால் அது காலப்போக்கில் இலங்கை மக்களை ஜனநாயகமயப்படுத்தி இலங்கையில் ஒரு குடியாட்சி மலர்வதற்கு வித்திட்டது.

கூட்டுறவு அமைப்புக்கள் கடைப்பிடித்த உயர்ந்த கூட்டுறவுக் கொள்கைகளும், நடைமுறைகளும் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், மனிசிகம் போன்ற ஜனநாயக விழுமியங்கள் பாமரமக்கள் மத்தியிலும் சமுதாயத்திலும் நன்கு வேரூன்றவும் வெற்றியீட்டவும் கூட்டுறவு அமைப்புக்கள் அளப்பரிய பங்களிப்பை நல்கியுள்ளன.

இலங்கைக் கூட்டுறவு அமைப்பு ஜனநாயகப் பழக்கவழக்கங்களிலும் மரபு முறைகளிலும் பாமரமக்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பயிற்சிக்கூடமாக விளங்கியது. கலந்துரையாடல் விட்டுக்கொடுத்தல், சகித்துக் கொள்ளுதல் சிறந்த முடிவுகளை ஏகமனதாக மேற்கொள்ளுதல் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதல் அவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்துதல் போன்ற ஜனநாயகப் பழக்கவழக்கங்களின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் கூட்டுறவு அமைப்புக்கள் அரும் பெரும் தொண்டு புரிந்துள்ளன.

இலங்கையில் நடைபெற்ற ஜனநாயகத் தேர்தல்கள் வெற்றி பெறுவதற்கும் கூட்டுறவு அமைப்புக்கள் பெரிதும்உதவிபுரிந்துள்ளன. இலங்கை மக்கள் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கூட்டுறவுச்சங்கத் தேர்தல்களில் அபேட்சகர் நியமனம், வாக்களிக்கும்முறை, அபேட்சகர் தெரிவு போன்ற துறைகளில் மக்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் பயிற்சி

(8ம் பக்கம் பார்க்க)

# நிறுவன நோக்கினை அடைவதில் மனித வளத்தை கையாள்வது தொடர்பில்முகாமையாளர்களின் பங்கு

நாம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு நிறுவனங்களுடன்தொடர்புபடுகின்றோம். அந்நிறுவனங்கள்ஏதோ ஒரு நோக்கத்தினைக்கொண்டுள்ளன. வரையறைக்கு உட்பட்டவளங்களைக் கொண்டு உத்தம விளைவுகளை அடைவதே நோக்கமாகக் காணப்படுகின்றன; மனிதவள முகாமை நோக்கில் வினைத்திறன் ( Efficiency ) சமத்துவம் ( Equity ) என்பன நோக்கங்களாகக் காணப்படலாம். ஒருநிறுவனம் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டுமாயின் அது தனது நோக்கத்தினை சரியாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். இந் நோக்கங்களை அடைந்து கொள்ளல் என்பது நிறுவனத்தைச் சரியான முறையில் முகாமை செய்வதில் தங்கியுள்ளது முகாமை என்பதற்கு பலரும் பல்வேறு வரைவிலக்கணம் கூறியுள்ளபோதும் Koontz & O' Donnell ஆகியோர் 1976ல் கூறியுள்ள வரைவிலக்கணம் நடைமுறையில் அதிக் பொருத்தப்பாடுடையது. முகாமைஎன்பது திட்டமிடல் ஒழுங்கமைத்தல், ஊழியரிடல் வழிநடத்தலும் தலைமைதாங்கலும், கட்டுப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய செய்முறை ஆகும். அதுவே இவர்களது கருத்தாகும். இந்த முக்கிய பணிகளைப் பொறுப்பேற்று செய்பவர்கள் முகாமையாளர்கள் ஆவர்.

## முகாமையாளர்கள் :

நிறுவன இலக்குகளைநிர்ணயித்து நிறுவனத்தை வழி நடத்திச் செல்பவர்கள் முகாமையாளர்கள். இவர்கள் பொது முகாமையாளர்கள், நடுத்தர மட்ட முகாமையாளர்கள், கீழ்மட்ட முகாமையாளர்கள் என தனதுசேவையினை நிறுவனத்திற்கு வழங்குவர்

## பொது முகாமையாளர்கள்

நிறுவன இலக்கை அடைவதில் பொது முகாமையாளர்களின் பங்கு முக்கியமானது இவர்கள் நிறுவன கட்டமைப்பில் உயர் மட்டத்தில் அங்கம் வகித்து இயக்குநர் சபையுடன் இணைந்து கொள்கைகள், நோக்கங்களை வகுத்தாலும், கீழ்மட்டத்தில் உள்ளவர்களுக்கும் இயக்குநர் சபைக்கும் இடையில் ஓர் இணைப்பாளராகச் செயற்படுகின்றனர் - அதாவது நடுத்தரமட்ட முகாமையாளர்களின் அதிகாரங்கள் பொறுப்புக்களை வரையறுத்து குழுக்களாகச் செயலில் ஈடுபட வைக்கின்றனர். அத்துடன் குழுக்களுக்கிடையில் போட்டியை ஏற்படுத்தக் கூடிய வகையில் இவர்கள் செயற்பட வேண்டும்.

## நடுத்தர மட்ட முகாமையாளர்கள்

இங்கு ஒவ்வொரு பகுதியினது முகாமையாளர்களும் உதவி முகாமையாளர்களும் காணப்படுவர். அதாவது நிதி, சந்தைப்படுத்தல், உற்பத்தி ஆகிய பகுதிகளின் தலைவர்களும், அவற்றின் உதவி முகாமையாளர்களும் காணப்படுவர். இவர்கள் தமது குறுங்கால இலக்குகளை அடைவதன் மூலம் நிறுவனத்தின் உயர் மட்ட முகாமையால் உருவாக்கப்படும் கொள்கைகள் நோக்கங்களை அடைவதற்கு உதவுவர்.

## கீழ் மட்ட முகாமையாளர்கள்

இதில் மேற்பார்வையாளர்கள், பிரதம லிகிதர், போர்மன் (Foreman) ஆகியோர் அங்கம் வகிப்பர் இவர்கள்.

- ☆ நாளாந்த வேலைகளைத் திட்டமிடல்
- ☆ தொழிலாளர்களை தேவைக்கேற்ப ஆலோசனை ஆதரவு என்பவற்றை வழங்கி வழிநடத்துதல்
- ☆ மேல் முகாமைக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- ☆ ஊழியர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ தாமாகவேலை செய்யத் தூண்டுதல் ஆகிய கருமங்களில் ஈடுபடல்

## முகாமையாளர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்

நிறுவனம் வினைத்திறனாகஇயங்குவதற்கு முகாமையாளர்களின் பண்புகளும் திறமைகளு பங்காற்றும் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள முகாமையாளர்களுக்கும் வெவ்வேறுபட்ட கடமைகள் ஒப்படைக்கப்படுகின்றன. எனவே அவர்கள் அவற்றைச் சிறப்பாக செய்வதற்கு தொழில்நுட்ப அறிவு, மனிதநேயம், கிரகிக்கும் தன்மை ஆகிய திறமைகளைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். மேலும் ஒரு சிறந்த முகாமையாளருக்கு இருக்கவேண்டிய முக்கியமான தனிப்பட்ட பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சிறந்த தீர்மானங்களை எடுக்கக் கூடியவராக இருத்தல்.
2. சுயமாக கருமங்களை ஆரம்பிக்கக்கூடியவராக இருத்தல்.
3. பொறுப்புள்ளவராக இருத்தல்.
4. தெளிவான சிந்தனை உடையவராகவும் பரந்த அறிவு உள்ளவராகவும் இருத்தல்.
5. புதிய காரியங்களை செய்யும் துணிவுள்ளவராகவும், உறுதியானவராகவும் இருத்தல்.
6. சுறுசுறுப்பானவராகவும், விவேகமானவராகவும் இருக்கவேண்டும் மேலும் விழிப்பான அவதானம், அனுபவம், புதிய எண்ணங்களை உருவாக்கல், கற்பனாசக்தி உள்ளுணர்வு ஆகிய பண்புகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

## முகாமையாளர்களின் கடமைகள்

நிறுவனத்திற்கு நிறுவனம் வெவ்வேறுபட்ட பிரச்சனைகள் காணப்பட்ட போதிலும் எல்லா நிறுவனங்களும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அப் பிரச்சனைகளில் தொழிலாளர்களினதும், தொழிற்சங்கங்களினதும் கோரிக்கை ஒன்றாகும். ஒருபிரச்சனையை வெற்றிகரமாக கையாள்வதற்கு அப்பிரச்சனையைத் தெளிவாக விளக்கிக் கொள்ள வேண்டும். எனவே முகாமையாளர்கள் இவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட முன் ஊழியர் என்ன கோரிக்கையை முன்வைக்க இருக்கிறார்கள். அது நிறைவு செய்யப்படாவிடின் எத்தகைய எதிர்விளைவுகளை ஏற்படுத்துவார்கள் என்பதை முறைசாராரீதியில் அறிதல் வேண்டும்.

1961 - 1980 காலப்பகுதியில் தோமஸ் பீற்றர் ( Thomas Peter ) றொபேட் வாட்டமன் ( Robert Waterman ) ஆகியோர் அமெரிக்கா கம்பனிகள் சிலவற்றை ஆராய்ந்ததில் அவ்வ சிறந்த தொழிற்சாலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததின் மூலமும் ஊழியர்களின் சமூக தேவைகளைச் சிறந்த முறையில் திருப்தி செய்வதன் மூலமும் வெற்றிகரமாக இயங்கியமை கண்டறியப்பட்டது. எனவே →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 6ம் பக்கத் தொடர்ச்சி )

சிறந்த தொழிற்சாலைச் சூழலைஏற்படுத்திக் கொடுப்பதும், அவர்களின் சமூகஉளவியல் தேவைகளைத் திருப்தி செய்தலும். முகாமையாளர் கடமையாகும். மேலும் ஊழியரின் முயற்சி நிறுவன வெற்றிக்கு அவசியம் என்பதை ஊழியர் மத்தியில் ஏற்படுத்துவதோடு ஊழியர்கள் நிறுவனத்தின் மூல விழுமியங்களுக்குமதிப்புக்கொடுக்கும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.

## திட்டமிடலில் முகாமையாளரின் பங்கு

திட்டமிடல் என்பது இடைவெளியை நிரப்புவதற்கான ஒரு செய்முறை ஆகும். அதாவது நோக்கத்தினை அடையும் பொருட்டு தற்போதுள்ள வளங்களின் குறிப்பாக மனித வளத்தின் நிலை என்ன என்பதை ஆராய்ந்து அடைய விரும்பும் நோக்கத்தினை எய்துவதற்கான நிலைமை என்ன என்பதை ஆராய்ந்து இரண்டிற்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது இச் செய்முறையாகும் திட்டமிடலில்வரையறைகள் காணப்பட்டபோதிலும் நிறுவனத்தை எதிர்காலத்தில் வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்ல திட்டமிடல் முக்கிய பங்காற்றுகின்றது எனவே முகாமையாளர்கள் வியாபார வாய்ப்புக்களையும், பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு தொடர்புடையதகவல்களை சேகரித்து பகுப்பாய்வு செய்து மாற்று வழிகளை பட்டியலிட்டு அவற்றை மதிப்பீடு செய்து சிறந்த மாற்றுவழியினைத் தெரிவு செய்ய வேண்டும்.

## ஊழியரிடலில் முகாமையாளரின் பங்கு

நிறுவனத்தின் நோக்கமானது ஊழியர்களை சிறந்த முறையில் வழி நடத்தி அடையப்பட வேண்டும் என்பதனால் நிறுவனத்திற்கு ஊழியர்களைச் சேர்க்கும் போது முகாமையாளர்கள் மிகவும் கவனமாக செயற்படல் வேண்டும். மனித வள முகாமை நோக்கில் வினைத்திறன் ஒரு நோக்கமாக அமைவதால் ஊழியரிடும் போது அது நெகிழ்வுத் தன்மையினைக் கடைப்பிடிக்கின்றது. நெகிழ்வுத் தன்மையானது இருவழிகளில் கடைப்பிடிக்கப்படலாம்.

1 செயற்பாட்டு நெகிழ்வுத் தன்மை

இங்கு வேலைகளுக்கிடையில் மாற்றி பயன்படுத்தக் கூடிய தனிநபர்களைக் கொண்ட வேலைச்சூழக்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படுகின்றது.

2. நேர நெகிழ்வுத்தன்மை

இங்கு ஊழியர்கள் வேலை ஆயுட்காலம் முழுவதற்குமாகஅன்றி வேலை ஒப்பந்தங்களுக்காக அல்லது குறிப்பிட்ட வேலை மணித்தியாலங்களுக்காக வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்:

ஊழியரிடும்போது

☆ எத்தகைய,ஆற்றல்அனுபவங்கள், திறமைகளைத் கொண்ட ஊழியர்களை சேர்க்க வேண்டும்.

☆ நபர்களது அறிவு, ஆளுமை, விழுமியங்கள், மனப்பாங்குகள்.

☆ எப்போது, எப்படி நபர்களை உள்ளெடுக்க வேண்டும்.

☆ பொருத்தமான நபரை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும்.

ஆகிய அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஊழியர்கள் பல கருமங்களுக்கு மாற்றி பயன்படுத்த வேண்டி இருப்பதனால் அவர்கள் பல கருமங்களையும் ஆற்றக்கூடியவர்களாகவோ அவற்றை எளிதில் கற்கக் கூடியவராகவோ இருக்க வேண்டும். எனவே அவர்களின் திறமையை அறிவதற்கு நுண் அறிவுச்சோதனை நடாத்தல், கல்வித்தகைமைச் சான்றிதழ், நற்சான்றிதழ் என்பவற்றை சமர்ப்பிக்குமாறு பணிக்கலாம். இவற்றில் தகமை உடையவர்களை நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தலாம். இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை நிறுவனத் தேவைக் கேற்ப வேலைக்கு அமர்த்தலாம்,

## ஒழுங்கமைத்தலில் முகாமையாளரின் பங்கு

ஒழுங்கமைத்தல் என்பது நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்குத் தேவையான செயற்பாடுகளை நிர்ணயித்து வரையறுத்துக் கொள்வதன் ஊடாக நிறுவனக்கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ளும் ஒரு படி முறை ஆகும். ஒழுங்கமைப்பு படிமுறையில் திணைக்களமயமாக்கல் கையளிப்பு, பரவலாக்கல் ஆகிய அம்சங்கள் காணப்படுகின்றன திணைக்களமயமாக்கல், பல்வேறு வழிகளில் அடிப்படைகளில் மேற்கொள்ளப்படினும் தொழிற்பாட்டு அடிப்படையில் திணைக்கள மயமாக்கல் மேற்கொள்ளப்படுமாயின் இங்கு தொடர்புடைய கருமங்கள் தொகுதியாக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுகளுக்கும் ஒப்படைக்கப்படுகின்றன பொறுப்புக்களை ஒப்படைத்தால் மாத்திரம் போதாது அவற்றைத் திறமையாக நிறைவேற்றப் போதுமான அதிகாரங்களைக் கையளிக்க வேண்டும் அத்துடன் தொடர்புகளையும் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

## கட்டுப்படுத்தலில் முகாமையாளரின் பங்கு

முகாமையாளர்கள் நிறுவன முன்னேற்றம் கருதி பல திட்டங்களை வகுத்தாலும் அவை நடைமுறையில் அடையப்பட வேண்டும் எனவே உண மையான செயற்பாட்டினை அறிந்து அளவிட வேண்டிய தேவை உள்ளது. இங்கு பின்னூட்டியின் பங்கு அவசிய மானது; முகாமையாளரின் உருவாக்கப்பட்ட திட்டங்கள் நடைமுறையில் அடையப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த அவை உண்மைச் செயற்பாட்டுடன் ஒப்பிடப்படுகின்றன. இவ்வாறு ஒப்பிடப்படும் போது இரண்டிற்குமிடையில் வேறுபாடு அதாவது விலகல் காணப்படுமாயின் அவற்றை நிவர்த்தி செய்ய முகாமையாளர்கள் நடவடிக்கை எடுப்பர். எனவே முகாமையாளர்கள் கட்டுப்படுத்தல் நுட்பங்களை அறிந்திருப்பது அவசியமாகின்றது. தனிநபர்களுக்கான நியமங்கள் தீர்மானிக்கப்படுபோது அவர்களையும் பங்கு பற்ற வைப்பதன் மூலம் விலகலினை குறைந்தளவில் பேண முடியும்.

## தகவலின் பங்கு

நிறுவனத்தை வெற்றிகரமாக வழி நடத்துவதற்கு மனிதவளம் எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று தகவலும் முக்கியமானது. தகவல் திட்டமிடலுக்கும், கட்டுப்படுத்தலுக்கும் இன்றியமையாதது. அது மாத்திரமன்றி உயர்மட்டங்களில் என்ன தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன, அவற்றை அமுல்படுத்துவதில் கீழ்மட்ட ஊழியரிடம் என்ன எதிர்பார்க்கப்படுகின்றன, கீழ்மட்டத்தில் என்ன நடைபெறுகின்றது என்பவற்றை அறிய தகவல் முக்கியமானது.

முகாமையாளர்கள் நியமனங்களை தெளிவாக வரையறுத்து அவற்றினை ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களை இலக்கு நோக்கி வழி நடத்த வேண்டும். இவ்வாறு வழி நடத்தும் போது நிறுவனங்களில் ஏற்படும் பிரச்சினைகளை சுமூகமான முறையில் கையாண்டு சிறந்த உறவுகளைப் பேணுவது முகாமையாளர்களின் பொறுப்பாகும். மேலும் நிறுவனத்தில் திறமையான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தினால் மட்டும் போதாது அவர்களின் செயற்திறனை அதிகரிக்க அவர்களை சிறந்த முறையில் ஊக்கப்படுத்த வேண்டும். எனவே முகாமையாளர்கள் ஊழியர்களை கௌரவத்துடனும், அக்கறையுடனும் வழி நடந்துவதோடு ஊழியர்களில் அக்கறை உடையவர்களாகவும் அவர்களுக்கு ஆதரவு வழங்குபவர்களாகவும், அவர்களின் தேவைகளை நிறைவு செய்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு ஊழியர்களை வழி நடத்தும் போது ஊழியரின் திருப்தி அதிகரித்து அதன் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைய முடியும் குறிப்பாக மனித வள முகாமைத்துவ நோக்கங்களாக வினைத்திறன் சமத்துவம், ஆகிய இரண்டினையும் சமநிலையில் பேண முடியும்.

ஜே. பி கோல்டன்
முகாமைத்துவம் 3ம் வருடம்
யாழ் பல்கலைக்கழகம்

நன்றி: முகாமைநோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டில்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

களுமே இலங்கையில் நடைபெற்ற ஜனநாயகத் தேர்தல்கள் பூரண வெற்றி பெறுவதற்கு உதவின.

ஜனநாயக தலைமைத்துவ வளர்சியிலும் கூட்டுறவியக்கம் மட்டற்ற பங்களிப்பை வழங்கியுள்ளது. மக்களை ஒற்றுமைப்படுத்தி நிறுவன மயப்படுத்தல், மக்களை இலட்சிய மயப்படுத்தல், மக்களுக்கு ஆலோசனை வழங்கல்; மக்களை நெறிப்படுத்தல், மக்களை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும், மக்களை நல்வழிப்படுத்தல், மக்களைத் தலைமை தாங்கல் போன்ற ஜனநாயக தலைமைத்துவத் தொழிற்பாடுகள் வளர்ச்சியடைவதற்கு கூட்டுறவு அமைப்புக்கள் அத்திவாரமாக அமைந்துள்ளன.

ஜனநாயகத் தலைமைத்துவ தொழிற்பாடுகள் மட்டுமன்றி அறிவு, அனுபவம், ஆளுமை, கடமை உணர்வு, நேர்மை, ஒழுக்கம், விசுவாசம், சமூக நலன் பேணல் போன்ற தலைமைத்துவப் பண்புகள் சமுதாயத்தில் வளரவும் வேரூன்றவும் கூட்டுறவு அமைப்புக்கள் பயிற்சிக்கூடமாக விளங்கின. கூட்டுறவு அமைப்புக்களில் தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட பலர் நாட்டின் தலைவர்களாகவும், அமைச்சர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் பதவிவகித்து நாட்டின் ஜனநாயக அரசை சிறப்பித்தமை இங்கு குறிப்பிடவேண்டிய விடயமாகும். இவற்றின்மூலம் இலங்கைக் கூட்டுறவு அமைப்புக்கள் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாகவும் பாதுகாவலனாகவும் விளங்கி நாட்டில் ஜனநாயகமும் குடியரசும் மலர்வதற்கு வித்திட்டதென்றால் அது மிகையாகாது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது போன்று இலங்கையின் பொருளாதார வரலாற்றிலும் கூட்டுறவு அமைப்புக்கள் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியதாகவும் கொள்ளப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து அதன் ஒரு பங்காளிபோல் செயற்பட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த கூட்டுறவு அமைப்பு பெரிதும் உதவியுள்ளது.

அரசாங்கத்தின் உணவு விநியோகம், கிராமிய விவசாயவிருத்தி, கிராமிய சிறுஉற்பத்திகளின் வளர்ச்சி, விவசாய கிராமிய கடன் அபிவிருத்தி கிராமிய விவசாயப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் கிராமிய, சிக்கன சேமிப்புத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அங்கத்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தல் போன்றவற்றுக்கு செயற்றிறன் மிக்க அபிவிருத்தித் திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் உருவாக்கிச் செயற்படுத்தியதன் மூலம் இலங்கைக் கூட்டுறவு அமைப்புக்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிந்துள்ளன.

விசேடமாக வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு அமைப்புக்கள் போரால் பாதிக்கப்பட்டு சொல்லொண்ணாத்துன்பங்களைஅனுபவித்த மக்களுக்கு அரசாங்கத்தினதும், சர்வதேச அகதிகள் புனர்வாழ்வு இணையங்களினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் புனர்வாழ்வுச்சேவைகளைப் பொறுப்பேற்று வெற்றிகரமாக செயற்படுத்தி மாபெரும் புனர்வாழ்வுச் சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுக்குமேலாக கடும் யுத்த அபாயங்களுக்கு மத்தியிலும் மற்றும்பல இன்னல்களுக்கு மத்தியிலும் விற்பனை நிலையங்களைநடாத்தியும் ஆபத்துக்காலச் சேவைகளையும் புனர்வாழ்வுச் சேவைகளையும் சிறப்பாக நடாத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜனநாயக சாத்வீக ரீதியில் குரலெழுப்பியும் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு சேவைபுரிந்த பெருமை வடக்கும் கிழக்கு மாகாண கூட்டுறவு அமைப்புக்ளுக்கு உரியதாகும். இதனால் கூட்டுறவுச்சேவை ஒரு மக்கள் சேவைமட்டுமல்ல ஒரு தெய்வீகச்சேவையுமாகுமென்று கூறினால் அது மிகையாகாது.

சமூகத்துறையில் கூட்டுறவு அமைப்புக்கள் புரிந்த சாதனை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியாதாகும். சாதி, இன மத, பிரதேசவேறுபாடுகளை முற்றாக அகற்றி உலகம் பூராகவும் ஒரு சமுதாயம், அமைதியும், ஐக்கியமும் சமத்துவமும், சுபீட்சமும் அதன் குறிக்கோள். என்ற உயர்ந்த மனித இலட்சியத்தை நிறைவேற்ற கூட்டுறவு அமைப்புக்கள் அயராது உழைத்துள்ளன. போர், போட்டி, பகை, முரண்பாடுகளை முற்றாக நீக்கி அமைதி நிறைந்த ஒரு புரட்சிகரமான நவீன சமுதாயத்தை உருவாக்க கூட்டுறவு அமைப்புக்கள் அயராது உழைத்துள்ளன.

உலக மக்கள் அனைவரையும் ஒரு சமுதாயமாக இணைப்பதில் கூட்டுறவு அமைப்புக்கள் ஒரளவாவது வெற்றிகண்டுள்ளன. எவ்வித வேறுபாடுமின்றி கிராமிய மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி கிராமிய ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும், சர்வதேசரீதியாகவும், கூட்டுறவு அமைப்பின் மூலம் இணைத்து அந்நியோன்னியத்தையும், உலக ஒருமைப்பாட்டையும் நிலை நாட்டுவதில் கூட்டுறவு அமைப்புக்கள் சிறிதளவாயினும் வெற்றிகண்டுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

இலங்கையின்கலாச்சார அபிவிருத்தியில் கூட்டுறவு அமைப்புகள் நல்கிய சேவையும் பாராட்டத் தக்கதாகும். முதன் முதலாக விவசாயிகளுக்குவிவசாயக்கல்வியையும்தொழில் நுட்பக்கல்வியையும் முதியோருக்கு முதியோர் கல்வியையும், மகளிருக்கு மகளிர் கல்வியையும் போதித்த பெருமை கூட்டுறவு அமைப்புக்களுக்குரியதாகும்

கூட்டுறவுக்கல்வியை கூட்டுறவுக் கல்வியாகவும், முகாமைத்துவக்கல்வியாகவும், தொழில் நுட்பக்கல்வியாகவும், வாழ்க்கைக் கல்வியாகவும் போதித்து கலாச்சார சமூகத்துறையில் கூட்டுறவுஅமைப்புக்கள் பெருமளவிலான வளர்ச்சியை ஏற்படுத்தின.

சங்க கிளை மட்டத்திலும். சமூக மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும், மகளிர் கூட்டுறவு அமைப்புக்களை ஏற்படுத்தி சமுதாயத்தில் மகளிரின் விடுதலைக்கு வித்திட்ட பெருமை கூட்டுறவு அமைப்புக்களுக்கே சாரும். செய்முறைப் பயிற்சி வகுப்புக்கள் கருத்தரங்குகள் மூலம் குடும்ப நிர்வாகம வீட்டுநிர்வாகம், போசாக்குள்ள உணவைத்தயாரித்தல், குழந்தைப் பராமரிப்பு போன்றதுறைகளில் மகளிர் விழிப்புணர்ச்சியடையவும் திறமை பெறவும் வழிவகுத்த பெருமை கூட்டுறவு அமைப்புக்களுக்குரியதாகும்.

நாட்டின் அபிவிருத்திக்கு மேற்கூறிய வாறு ஒரு நூற்றாண்டு காலமாகசேவைபுரிந்தஇலங்கைக்கூட்டுறவு அமைப்புக்கள் பற்றி பலகண்டனங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளமை மனவருத்தத்திற்குரியதாகும் இவ் விமர்சனங்களுள்சிலவிமர்சனங்கள் அர்த்தமற்றவையாகவும் சில அர்த்தமுள்ளவையாகவும் உள்ளன. இக் கண்டனங்களையும் விமர்சனங்களையும, நன்குஆராய்ந்துஅவற்றிலுள்ள உண்மை நிலையைக் கண்டறிந்து எதிர்வரும் நூற்றாண்டில் அவற்றை நிவர்த்தி செய்துகொள்வதற்கான உபாயங்களைக் கண்டறிந்து அவற்றை முற்றாகவே நிவர்த்தி செய்யவேண்டியது இருபத்தோராம் நூற்றாண்டுக் கூட்டுறவாளரை எதிர்நோக்கியுள்ள பாரியகடமைப்பாடாகும்

( தொடரும் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புகளால் பரவும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நடைமடுவம், மலசலகூடம் போன்ற இடங்களுக்கும் மலத்தியன் தெளித்து நுளம்புபெருகுவதைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3 மலேரியா பரவலாக உள்ளபகுதிகளில் வாழும் பெண்கள் தாங்கள் கர்ப்பமுற்றிருக்கும் காலத்தில் மலேரியாத் தடுப்பு மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொள்வது நல்லது,

* மற்றவர்களிலும் பார்க்க, கர்ப்பமுற்ற பெண்களுக்குமலேரியா வரும் சாத்தியம் இரண்டு மடங்கு அதிகம். கர்ப்பவதிகளுக்கு இந்நோயால் ஏற்படக்கூடிய ஆபத்தும் அதிகம். மலேரியாவின் விளைவாக இரத்தச்சோகை ஏற்பட்டு அதன் காரணமாக குறைப் பிரசவம், கர்ப்பச் சிதைவு, சிசு இறந்து பிறத்தல் ஆகியவை ஏற்படலாம். மலேரியா கண்ட பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எடை குறைந்தும்பலவீனமானவையாகவும்தொற்று நோய்களுக்கு இலகுவில் ஆளாக்ககூடியனவையாயும் உள்ளன.

* கர்ப்பகாலத்தில் மலேரியா தடுப்பு மாத்திரைகளை ஒழுங்காக உட்கொள்வதன் மூலம் கர்ப்பமுற்ற பெண்கள் மலேரியாவிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம்

* வைத்தியரின்அல்லது பயிற்சிபெற்ற சுகாதாரஊழியரது ஆலோசனைப்படி மாத்திரமேகர்ப்பவதிகள் மலேரியாத் தடுப்பு மருந்துகளை உட்கொள்ள வேண்டும் ஏனெனில் மலேரியாவுக்கான சில மருந்துகள் கர்ப்பிணிப் பெண்களுக்கு உகந்தவையல்ல.

4 மலேரியா உள்ள பகுதிகளில் வசிக்கும்குழந்தைகளுக்குக்காய்ச்சல்வந்தால் வைத்தியரிடம் அல்லது பயிற்சிபெற்ற சுகாதார ஊழியரிடம் காட்டவேண்டும்.

* மலேரியா காய்ச்சலாக இருந்தால் அதற்கான சிகிச்சை மருந்துகளை முழுதாகக் (ஐந்து நாள் சிகிச்சை) கொடுக்கவேண்டும்.

* மலேரியாக் காய்ச்சல் உள்ள குழந்தைகளுக்கு மலேரியா எதிர்ப்பு மாத்திரைகளை இடை நிறுத்தாது தொடர்ந்து கொடுக்க வேண்டும். இந்த மாத்திரைகளை ஐந்து நாட்களுக்குக் கொடுக்கவேண்டும் (மிகச் சிறிய குழந்தைகளுக்கு மலேரியா எதிர்ப்பு மருந்து பாணியாகவும் கிடைக்கிறது.

* வைத்தியர் அறிவுறுத்திய படி மருந்துகளைத் தொடர்ந்து (முடியும் வரை) கொடுக்கவேண்டும். காய்ச்சல் நின்றதும் மருந்துகளை நிறுத்திவிடக் கூடாது.

* மலேரியா பரவலாகக் காணப்பட்டாலும் அந்நோய் பாதிக்காத பிள்ளைகள் மலேரியாத்தடுப்பு மாத்திரைகளைத் தினமும் உட்கொள்ளக் கூடாது.

* ஏனெனில் மலேரியாவை எதிர்க்கும் சக்தியை பிள்ளைகள் தம் உடலில் இயற்கையாக வளர்த்துக் கொள்வதை இது தடுத்துவிடும்.

5. காய்ச்சல் உள்ள குழந்தையைக் குளிர்ச்சியான சூழலில் வைத்திருத்தல் வேண்டும். (ஈரமான சூழலில் அல்ல)

* காய்ச்சல் உள்ள பிள்ளைகளின் உடல் வெப்பத்தைக் குறைக்க:-

* உடல் வெப்பத்தைக் குறைக்கும் மருந்துகளைக் (பரசிற்றமோல்போன்றவற்றைக்) கொடுக்கலாம். காய்ச்சலைக் குறைக்க சிறு பிள்ளைகளுக்கு அஸ்பிரின் அல்லது அஸ்பிரின் அடங்கிய மருந்துகள் எதனையும் கொடுத்தல் கூடாது அது நிலைமையைச் சில வேளை மோசமாக்கிவிடலாம். டெங்கிக் காய்ச்சல் ஆயின் இரத்தம் வெளியேறலை அது அதிகரித்துவிடலாம்;

* குளிர்ந்த நீரினால் (மிகக் குளிர்ச்சியான நீர் அல்ல) உடம்பைக் கழுவலாம் அல்லது ஒத்தடம் கொடுக்கலாம்.

* அதிகமான உடைகளையோ உடல் வெப்பத்தைக் கூட்டக்கூடிய 'பிளேங் கற்' போன்ற தடித்த துணிகளையோ அணியாதிருத்தல்.

6. காய்ச்சல் காணப்படும் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய அபாயங்கள் அவை தொடர்பான அறிகுறிகள் பற்றிப் போதிய அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

* காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளுக்கு சடுதியாக பல்வேறு சிக்கல்கள் ஏற்படக்கூடும், நோய் கண்டுள்ள பிள்ளை தொடர்பாக போதிய அவதானத்துடன் இருப்பதன் மூலம் எத்தகைய அபாயங்களையும் ஆரம்பத்திலேயே இனம்கண்டு உரியநடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

* காய்ச்சல் மூன்று தினங்களுக்கு மேல் நீடித்து இருப்பின் வைத்தியர் ஒருவரை நாடுங்கள்.

* காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வயிற்றுக்கோளாறுகள் என்பன டெங்கிக் காய்ச்சலுக்கான பொதுவான அறிகுறிகளாகும் எனினும் குழந்தைகளிடத்தில் -

1 தோலின் அடியில் இரத்த நிறத்தில் புள்ளி அல்லது கறைகள் தோன்றல்,
2 மூக்கு, முரசு என்பனவற்றில் இருந்து இரத்தம் வெளியேறல்
3 கண் சிவப்படைதல்.
4 மலம், சிறுநீர் அல்லது வாந்தியுடன் இரத்தம் வெளியேறல் போன்ற இரத்தம் வெளியேறலுக்கான) அறிகுறிகள் அல்லது.
5 நோய் தொடர்ந்து காணப்படுகையில் திடீரென காய்ச்சல் குறைந்து விடல்.
6 உடல் குளிரடைதலும், வெளிறிப்போதலும்
7 சுவாசத்தினதும், நாடித்துடிப்பினதும் வேகம் அதிகரித்தல்
8 இரத்த அமுக்கத்தில் வீழ்ச்சி

போன்ற மோசமானநிலைமைகளுக்கான அடையாளங்கள் காணப்பட்டால் அப்பிள்ளைக்கு டெங்கி இரத்த வெளியேற்ற நோய் ஏற்பட்டிருக்கக் கூடும். இத்தகைய சந்தர்ப்பத்தில் எத்தகைய தாமதமும் செய்யாது உடனடியாகப் பிள்ளையை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்.

* காய்ச்சல் கடுமையான தலைவலி, வாந்தி, கழுத்துப்பகுதியில் இறுக்கம் ஆகியன யப்பான் என்கபலைட்டிஸ் எனப்படும் மூலைக்காய்ச்சல் நோயின் பொது அறிகுறிகளாகும். வலிப்பு நினைவு இழத்தல், மறதி என்பன நோய் முற்றிய நிலையை அடைகிறது. அல்லது கடுமையாகிறது என்பதைக் குறிக்கின்றன் என்கெபலைட்டிஸ் நோய் காணப்படும் பகுதியில் உள்ள பிள்ளைகளுக்குக் காய்ச்சல், தலைவலி, வாந்தி, உடல்வலி போன்றன காணப்படின் உடனே வைத்தியர் ஒருவரிடம் கொண்டு சென்று காட்டல் நல்லது.

* காய்ச்சல் கண்ட பிள்ளைக்கு முடிந்தளவு நீராகாரங்களை கொடுக்கவும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவோ விளையாடவிடவோ கூடாது. முடிந்தளவு ஓய்வு எடுக்க விடுங்கள்

7. மலேரியா டெங்கிக்காய்ச்சல் யப்பான் என்கெபலைட்டிஸ் (மூளைக்காய்ச்சல்) போன்றநோய்களிலிருந்து தேறும் பிள்ளைகளுக்கு உணவும் நீராகாரங்களும் நிறையத் தேவை.

(10ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு வளர்ப்பு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வாகும். இவ் அறிகுறி காணப்பட்டதுடன் இயற்கை முறையில் அல்லது செயற்கை முறையில் சினைப்படுத்த வேண்டும். இயற்கை முறையில் சினைப்படுத்தும் போது ஒருவருட வயதுடைய கடா 30 மறிக்கு சினைப் படுத்த போதுமானது.

சினைப்பட்ட ஆட்டின் கர்ப்ப காலம் 145 - 153 நாட்களாகும். குட்டியீனும் தாயை தனியாகப் பிரித்து வளர்க்க வேண்டும். பால் கறக்கும் ஆடானால் குட்டியீனுவதற்கு இரண்டு மாத முன் பால் சுரத்தல் நிறுத்த வேண்டும். அதன் படுக்கையாகக் காய்ந்த வைக்கோல், புல் போன்றவை இடவேண்டும். குட்டி ஈனும் அறிகுறி காணப்பட்டுஇரண்டு மணிநேரத்தில் குட்டி ஈனவேண்டும். தாமதம் ஏற்பட்டால்மிருக வைத்தியரின் உதவியை நாடவேண்டும். சாதாரண பிரசவங்களில் முன்னங்காலும் தலையும் சேர்ந்து வரும் வரும் பொழுது வழியில் தடங்கல் ஏற்படின் சிறு உதவிசெய்யலாம். குட்டியீன்று 30 நிமிடத்தில் நஞ்சுக்கொடி வெளியேறும் 5, 6 மணி நேரத்திலும் வெளியேறாவிடின் மிருக வைத்தியரின் உதவியுடன் வெளியேற்ற வேண்டும்.

பிறந்த குட்டிக்கு சளியம் அகற்றப்படவேண்டும். மூக்குவாய் என்பன சுத்தம் செய்ய வேண்டும். தொப்புள் நாண் தொற்று நீக்கிய கத்தரிக்கோலினால் வெட்டி வேப்பெண்ணை அல்லது அயடின் கரைசல் பூசவேண்டும். குட்டி பிறந்ததும் 3ம் வாரம் உணவாக புல்வகைகள் கொடுக்கலாம். அடர்வுத்தீவனமாக இறைச்சிக் கோழிக்கு ப விக்கப்படும் ஆரம்ப உணவு கொடுக்கலாம். 3-ம் மாத பருவத்தில் தாயிடம் இருந்து பிரித்து வைக்கலாம்.

## உணவூட்டல்:-

பாலூட்டும் ஆட்டிற்கும், கர்ப்ப முற்ற மறிக்கும் இறுதி 2 மாதமும் தீவன உணவு கொடுப்பது சிறந்தது அதிகமாக ஆடுவளர்ப்பவர்கள் தவிடு பிண்ணாக்கு சமபங்காகக் கலக்கப்பட்டு 1 அவுன்ஸ் கனிப்பொருட்கலவையையும்சேர்த்து 1-2நேர உணவாக ஊட்டப்படுகிறது. அத்துடன் போதியளவு இலைகுளைகளை உண்பதால் ஆட்டின் அடர் உணவுச் செலவை மீதப்படுத்தலாம்

## நோய்கள்

### ஆட்டுச்சோர்வுவாதம்:-

இந்நோய் ஆட்டின்மத்திய நரம்புத் தொகுதியை தாக்குகின்றது. இது ஆடும், மாடும் ஒன்றாக வளர்க்கும் போது மாட்டின் குருதியில்காணப்படும் 'செற்றேரியா', 'டிஜிடேற்றா' என்னும் புழு நுளம்பின் மூலம் ஆடுகளுக்கு கடத்தப்பட்டு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அறிகுறிகளாக தள்ளாடி நடத்தல், உடலின் பிற்பகுதி பலவீனமடைதல், கண்விழி கட்டுப்பாடின்றி அசைதல்ஆகும். இந்நோயைக் கட்டுப்படுத்த ஆடுகளையும், மாடுகளையும் வேறு வேறாக வளர்க்க வேண்டும், நுளம்பைக் கட்டுப்படுத்தவேண்டும்.

இதைவிட நிமோனியாத் தொடுகைகொப்புளத் தோல் அழற்சி கொக்சிடியோசிஸ், புழுத்தொற்றல், கள், கால்நோய், கழிச்சல், உண்ணி என்பனவும் ஏற்படுகின்றன.

# நுளம்புகளால் பரவும்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

* மலேரியாவும் ஏனைய நோய்களும் உடற் சக்தியை பெருமளவு அழித்து விடுகின்றன. அத்துடன் கடுங்காய்ச்சல் அதிகளவில் வியர்வையை உடலில் இருந்து வெளியேற்றி விடுகிறது. இது உடலின் நீர்த்தன்மையை பெருமளவில் குறைத்து விடுகிறது. நோய் குணமாக பிள்ளை நன்றாக உண்ணவும் குடிக்கவும் ஆரம்பித்தவுடன் அது இழந்த உணவுகளை மீண்டும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நோயிலிருந்து தேறும் போது இங்ஙனம் உணவும் பானங்களும் நிறையக் கொடுப்பதன் மூலம் அதனை உடல் வரட்சியிலிருந்தும் போசாக்கின்மையிலிருந்தும் பாதுகாக்கலாம்.

8. யப்பான்என் கெபலைட்டிஸ் (மூளைக்காய்ச்சல்) நோய்க் எதிரான தடுப்பு மருந்தை உரிய காலவேளைகளில் கொடுப்பதன் மூலம் அந்நோயிலிருந்து பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு வழங்கமுடியும்,

* ஜப்பான், என்கெபலைட்டீஸ் (மூளைக்காய்ச்சல்) காணப்படும் பகுதிகளிலுள்ள ஒன்று முதல் பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கப் படுகிறது. இதனை மூன்று முறை கொடுகக வேண்டும் முதல் முறை மருந்து கொடுத்து 2 - 4 வாரத்துள் இரண்டாவது முறையும், இரண்டாவது முறை மருந்து கொடுத்து 12 மாதங்களுக்குள் மூன்றாவது முறையும் மருந்து கொடுத்தல் வேண்டும். இத்தடுப்பு மருந்து மூன்று வருடங்களுக்கு நோய்வராது பாதுகாக்கும்.

* ஜப்பான் என்கெபலைட்டீஸ் (மூளைக்காய்ச்சல்) நோயை உருவாக்கும்வைரஸ் பன்றிகளின் இரத்தத்தில் வெகுவாகப் பரவுகின்றது, பன்றி இரத்தத்தில் இவ்வைரஸ்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியவை. இதனால் இந்நோய் வெகுவாகக் காணப்படும் பகுதிகளிலுள்ள பன்றிகளுக்குத் தடுப்பு மருந்து வழங்கும் திட்டமும் அமுல் செய்யப்படுகிறது. இந்நோயைக் கட்டுப் படுத்துவதில் இத்திட்டமும் பெருமளவில் உதவுகிறது.

9. பிள்ளைகளுக்கு நீண்ட காலமாக இருமல் காணப்படின் அது - யானைக் கால் நோயைப் பரப்பும் ஒட்டுண்ணி உடலில் இருப்பதன் காரணமாக இருக்க வேண்டும். எனவே இதுபற்றி அவதானத்துடன் இருத்தல் அவசியம்.

சுகப்படாது நீண்ட காலம் நிலைத்து நிற்கும் இருமல், உடலில் ஆங்காங்கே தடிப்புக்கள் வீக்கங்கள் ஏற்படல் என்பன யானைக்கால் நோயைப் பரப்பும் ஒட்டுண்ணிக் கிருமி உடலில் இருப்பதற்கான முக்கிய அறிகுறிகள் சிலவாகும்.

இத்தகைய அறிகுறிகள் காணப்படின் வைத்தியரின் ஆலோசனை பெறப்படல் வேண்டும். நோய் உண்டா இல்லையா என்பதை இரத்தப்பரிசோதனை மூலம் அறிந்து கொள்ளலாம். சிகிச்சை பெற வேண்டின் உரிய முறையில் (இடை நடுவில் விட்டு விடாது) பெற்றுக்கொள்ள வேண்டும்

- நன்றி சுகமஞ்சரி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகநாடுகளின் திருமண சப்பிரதாயங்கள்

☆ இங்கிலாந்தில் மணமகள் திருமணநாளன்று கட்டாயமாக அணிந்துகொள்ள வேண்டியவை; புதியதான சில உடைகள் (Something Nen)

(Something Old) பழையது ஏதாவது

(Something Borrowed) கடனாகப்பெற்றவை.

(Something Bune) நீலநிறத்தில் ஏதாவது என்ற நியதி உண்டாம் இதன் பிரகாரம்தான் இளவரசி டயானாவின் திருமணமும் நடைபெற்றது.

டயானாவின் புதிய திருமண உடுப்புடன் தாயினுடைய பழைய கைக்குட்டையுடன ஒரு சிமாட்டியிடம் இருந்து கடனாகப்பெற்ற "ப்ரூச்" ஐயும், அழகான நீல நிறக்கிளிப்பையும் அணிந்திருந்தாராம்

☆ கொரியநாட்டுத் திருமண ஊர்வலங்களில் வாத்துக்கள் கூட்டமாக ஊர்வலமாக முன்னே செல்லுமாம். இது மணமக்களின் பிரிவில்லாத உறவைக் குறிப்பதாக உள்ளதாம்.

☆ ஜேர்மன் நாட்டில் மணமகன் சட்டைப்பையில் ரொட்டியும், உப்பையும் வைத்துக்கொள்வான் மணமகனின் கோட்பையில் ஒரு கைபிடி தானிய வகைகளை போட்டு நிரப்பிவிடுவார்கள் இது மணமக்களின் சுபீட்சத்தையும் அதிர்ஷ்டத்தையும் குறிப்பதாக உள்ளதாம்.

☆ பிரான்ஞ் நாட்டில் புதுமணத் தம்பதியினர் பரம்பரைபரம்பரையாக குடும்பத்தினர் பாவித்த கோப்பைகளில்தான் மது அருந்துவார்களாம்

☆ "தாய்லாந்தில்" உள்ள கிராமங்களில் முதலிரவுப் படுக்கை வயதான தம்பதியினரால் விரிக்கப்படுகிறது. பள்ளியறையின் ஒரு பக்கத்தில் உணவுதானிய மூட்டை, பணப்பை மற்றும் எள்ளும் குவிக்கப்படுகிறது இது மணமக்களின் சுபீட்சத்தையும், விருத்தியையும் குறிப்பதாக உள்ளதாம்.

## வரிக்குதிரை

☆ வரிக்குதிரைகள் Equidae குடும்பத்தைச்சேர்ந்தவை. குதிரையும், கழுதையும் இதன் உறவினங்கள் இவைகளுக்கும் கூட ஆரம்ப காலத்தில் வரிகள் இருந்தன.

☆ இவை சுத்தமான சைவம். தாவரங்களையே உண்ணுகின்றன. பரந்த வெளியில் வாழுகின்றன.

☆ இதன் கோடுகள் (வரிகள்) கறுப்பு நிறமா என்று இதுவரை தெரியவில்லை, இவை பகைவர்களைக் குளப்பிவிட உதவுகின்றன.

☆ இவை பிறந்த உடனேயே ஓடத் தொடங்கிவிடும்.

☆ இவை ஆபிரிக்காவில் மட்டுமே வாழ்கின்றன.

## அறிவியல் இரகசியம்

☆ தூங்கும் நோயைப் பரப்பும் ஈக்களின் சக்தி இதனிடம் பலிப்பதில்லை இதனால் இவற்றின் இறைச்சியை உண்பது நோய் எதிர்ப்புச்சக்தியைக் கொடுக்கும் என்கிறார்கள். அறிவியல் அடிப்படையில் இது ஏற்கக்கூடியது அல்ல.

☆ இதன் பற்கள் ஆயுள்முழுவதும் வளர்ந்துகொண்டே இருக்கும். இப்படி ஒரு வசதி இவற்றுக்கு இல்லாவிட்டால் இவை புல்லை அரைத்துத்தின்ன முடியாது. இந்த இனமே இறந்து மறைந்திருக்கும்;

☆ இவற்றின் ஆயுள்காலம் சராசரி 20 ஆண்டுகள். தாயின் வயிற்றில் 370 நாட்கள் கர்ப்பகாலமாகும்.

☆ அதிக கொழுப்பு இவற்றின் தோலுக்கடியில் சேமித்து வைக்கப்படுகிறது.

☆ இவற்றின் மாமிசம் சிங்கத்திற்கு மிகவும்பிடித்தமான உணவாகும்

ஆதாரம் ; அறிவியல் உண்மைகள்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 12 வது வருடாந்தப்பொதுக்கூட்டம் அண்மையில் யாழ். தம்பசிட்டி அ. மெ. மி. த. க பாடசாலை மண்டபத்தில் திரு. அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். கூ. அ. திணைக்கள தலைமையகப் பரிசோதகர் திரு சி. கந்தசாமி முதன்மை விருந்தினராகவும் வடமராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு ச. சுந்தரமூர்த்தி கௌரவ விருந்தினராகவும், சிறப்புவிருந்தினர்களாக, கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு: க. யோகராசா. யாழ். மா. கூ. சபை மாவட்டச் செயலாளர் திரு சு. சிவசுப்பிரமணியம், யாழ். மா. சி. க. கூ. சங்க சமாசத்தலைவர் திரு: ச. முருகநேசன் சதாவதானி சனசமூக நிலையத்தலைவர் திரு. த. தங்கராசா. புலோலிமேற்கு கமக்காரர் அமைப்பு தலைவர் திரு. ச. விசுவநாதன், புலோலிமத்தி கமக்காரர் அமைப்புத் தலைவர் திரு. ஆ. வேலுப்மயிலும் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## இயக்குனர்

ஏனைய பிரிவுகளில் மொத்த மேலதிகக் குறைவுகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும் மேலே காட்டப்பட்ட பொதுவான படிவினை செலுத்துவதுடன் மாத இறுதியில் படிவம் 28ன் அடிப்படையில் கணிப்பீடு செய்து கிராமிய வங்கிப்பிரிவு தவிர்ந்த மொத்தமேலதிகத்தினைப் பற்றி கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மேலதிகக் கொடுப்பனவு செய்தல்வேண்டும்.

இப் படியினைப் பெறுவதற்கு குறைந்தது இரண்டு மணித்தியலமாவது கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும் பிரயாணச்செலவுபெற்றுக்கொள்ளலாம் என்றும். சொந்தவாகனம் வைத்திருப்பவர் ஒருகிலோ மீற்றருக்கு 2 ரூபா பெற்றுக் கொள்ளலாம் என்றும், இப்படியினை தலைவரும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இத்திட்டம்.

1 - 1 - 2000ம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News paper at the G. PO
SriLanka Under No K. V. J. 59 / 87

ஐக்கியதீபம்

தை - 2000

# வீரசிங்கமண்டப 1ம் மாடியில் பால்காச்சும் வைபவம்

புனரமைப்பு செய்யப்பட்டு வரும் யாழ். வீரசிங்கம்மண்டப கட்டிடத் தொகுதியில் 1ம் மாடியில் யாழ் மாவட்டகூட்டுறவு சபையின் காரியாலத்தில பால்காச்சும் வைபவம் இம்மாதம் 21ம் திகதி வியாழக்கிழமை காலை 10 - 30 மணிக்கு நடைபெற்றது.

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை தலைவர் திரு பெ க. கசபாபதி இவ் வைபவத்திற்கு தலைமை தாங்கி நடத்தி வைத்தார்

யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன், திருமதி கோ. திருநாவுக்கரசு (எண்பார்வை) திரு. எஸ். விஜயரத்தினம் முது பெரும் கூட்டுறவாளர் திரு. க. இ. குமாரசுவாமி உட்பட கூட்டுறவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

யாழ் கூட்டுறவுச்சபை பணிப்பாளர் சபைஉறுப்பினர்கள், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், மற்றும் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் உட்பட பலகூட்டுறவாளர்களும் கலந்து கொண்டனர்.

## யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)
களாக இருக்க வேண்டுமென்றும். கூட்டுறவின் பலனை சகல மக்களும் நுகர வேண்டும் என்றுகூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (எண்பார்வை) திருமதி கோ. திருநாவுக்கரசு பேசுகையில்கூறியதாவது,

கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றான கூட்டுறவுக்கல்வியை அங்கத்தவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் பணியாளர்களுக்கும் பிரச்சாரப்படுத்தி கூட்டுறவுபற்றிய அறிவை ஊட்டி கூட்டுறவுத் தலமைத்துவத்தை வளர்க்கும் ஓர் நிறுவனமாக இப்பயிற்சிக் கல்லூரி அமைத்து வந்துள்ளது. காலப் போக்கில் இக்கல்லூரி உரிய இடங்களில் உதவி பெற்று உலக நாடுகளின் கூட்டுறவுத் தரத்தைப் பேணமுயற்சிக்க வேண்டும்.

சர்வதேச நாடுகளில் கூட்டுறவுத் துறை வளர்ச்சி அடைந்து வருவதை நாம் அறிந்துகொள்ளக்கூடிய வகையில் வெளிநாடுகளில் இருந்து சிறந்த கூட்டுறவு சஞ்சிகைகளை தருவிக்கவேண்டும். நவீன உலகிற்கேற்ப நாம் கூட்டுறவுத்துறையை விரிவுபடுத்துவதற்கு சிறந்த நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இன்றய நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்றுவரும் கணனிப் பயிற்சி நெறியை ஏற்படுத்தி பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் இதன் மூலம் பாரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்களில் கணனி மூலம் சிலநடவடிக் கைகளை ஏற்படுத்தவும் வழிவகுக்கும் என்றுகூறினார்.

யாழ் பிரதேசசெயலகர் திரு. பா. செந்தில்நந்தனன் பேசுகையில் கூறியதாவது பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்புடையஇப் பகுதியில் இக்கல்லூரி அமைந்துள்ள படியால், இப்பகுதி மக்களுக்கு இக் கல்லூரி நல்ல பெறுபேறுகளை பெற்றுக் கொடுக்கும் எனவே இப்பகுதிமக்கள் கூட்டுறவு பற்றிய அறிவை பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் பேசுகையில் கூறியதாவது.

யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுப் பாரம்பரியத்தை வெளி உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்கு இக் கூட்டுறவுக் கல்லூரி ஒரு உதாரணமாக அமைதிருக்கிறது கூட்டுறவு அமைப்பு பற்றிய மக்களது பங்கு எவ்வாறு உள்ளது என்பதை கூட்டுறவாளர்கள் முதலில் அறிந்துகொள்ள வேண்டும்.

இக் கல்லூரியைப் பொறுத்தளவில் குறைந்த வளத்தைக் கொண்டு நிறைந்த வேலைத்திட்டத்தைதயாரித்துநடைமுறைப்படுத்திவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் விழாவில் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன் இலங்கைத் தேசிய கூட்டுறவுச்சபை பணிப்பாளர் திரு. எஸ் சிவமகாராசா உட்பட பலர் உரையாற்றினார்கள்.

மாவட்டச் செயலாளர் திரு. எஸ் சிவசுப்பிரமணியம் வரவேற்புரையையும்கல்லூரிஅதிபர் திரு.பொ. சண்முகசுந்தரம் நன்றிஉரையையும் நிகழ்த்தினார்கள்.

## கடற்றொழில் பரிசோதகர்களுக்கு கூட்டுறவுப் பயிற்சி

யாழ் மாவட்ட கூட்டுறவுக்கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடற்றொழில் பரிசோதகர்களுக்கான கூட்டுறவு தொடர்பான பயிற்சி நெறி ஒன்று யாழ் கூட்டுறவு சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி தலமையில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியின் போது மாவட்ட கடற்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர் திரு.எஸ்.எ.யோசப் யாழ்மாவட்டகூட்டுறவுச்சபைச் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

இப்பயிற்சி நெறியில் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் திரு. பொ சண்முகசுந்தரம். கல்விப்பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர் திரு. வீ. கே. சிவராஜசுந்தரம், மகளிர் விரிவாக்கஉத்தியோகத்தர் திருமதி. வே. செல்வரத்தினம் ஆகியோர் பயிற்சி அளித்தார்கள்.

இப் பயிற்சியில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட கடற்தொழில் பரிசோதகர்கள் கலந்துகொண்டனர்.

## கூட்டுறவுப்பயிற்சி ஆரம்பம்

யாழ் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி மீண்டும் பழைய இடத்தில் (குருநகரில்) கடந்த 17ம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கூட்டுறவு அ.உ. ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தார்

இவ் வைபவத்தில் கூட்டுறவுச்சபை தலைவர் திரு. பெ கனகசபாபதி கூட்டுறவு சபை செயலாளர் திரு. சு சிவசுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 14 மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மா. கூ. சபையினரால் 2000ம் ஆண்டு தை மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org